## பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

O.S. No.212/2023 Date : 15-07-2025

பெயர் : சந்திரா வாசா 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். நான் பொழிச்சலூரில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 1981 ஆம் ஆண்டில் இருந்து வருகிறேன், எனது நிரந்தர வசிப்பிடம் எந்த முகவரியில் அமைந்துள்ளது என்றால் எண் 2/722 பிள்ளையார் கோயில் தெரு பொழிச்சலூரில் வசித்து வருகிறேன் மேற்படி விலாசத்தில் அமைந்துள்ள எனது வீடானது எனது சொந்த வீடா என்றால் ஆம். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் எப்போதிலிருந்து குடியிருந்து வருகிறேனா என்றால் 2014 ல் இருந்து குடியிருந்து வருகிறேன். நான் தாக்கல் செய்த வழக்குரையில் மேற்படி விலாசத்தில் 2014 ஆண்டு முதல் வசித்து வந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் மேற்படி தாவா சொத்து விலாசத்தில் 01.05.2015 முதல் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான்.

வா சா ஆ 2 ஆவணத்தில் 01.05.2015 இருந்து ஆவணம் ஏற்பட்டடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது சரிதான். வா சா ஆ 2 ஆவணத்தில் குத்தகை எவ்வளவு ஆண்டுகளுக்கு ஏற்படுத்தப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா சா 2 ஆவணத்தில் குத்தகை இடத்தில் சொத்து விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 2 ஆவணத்தில் மேற்படி குத்தகை காலம் எப்பொது முடிவுபெறும் மற்றும் குத்தகை பணம் எப்போது திருப்பி செலுத்தும் விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 1 ஆவணத்தில் எரிவாயு இணைப்பு 09.10.2017 அன்று பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா சா ஆ 4 ஆவணம் ஆனது 08.03.2017 அன்று புகார் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 3 ஆவணம் ஆன புகார் மனு ஏற்பு ரசீது 26.09.2017 அன்று புகார் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 3 ஆவணமானது 08.03.2017 அன்று கொடுத்த புகார் மனுவிற்கு கொடுத்த ரசீது கிடையாது என்றால் சரிதான். வா சா ஆ 5 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பியது சரிதான். அந்த பதில் அறிவிப்பில் 21.03.2015 முதல்

16.05.2015 வரை 1ம் பிரதிவாதி அமெரிக்காவில் வசித்து வந்ததாக குறிபிபட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும் அவர் மேற்படி காலத்தில் சுற்றுலா சென்று வந்தார்.

மேற்படி விவரத்தை பிராமாண வாக்குமூலத்தில் மட்டும் குறிப்பிட்டுவிட்டு வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா சா ஆ 7 ஆவணமானது எரிவாயு இணைப்பு பெற்றதற்கான ரசீது 10.10.2017 அன்று வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான். வா சா ஆ 9 ஆவணமான எரிவாயு உருளை வாங்கியதற்கான ரசீது 18.12.2017 அன்று பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான். வா சா ஆ 10 ஆவணமான காப்பீடு பத்திரம் 07.10.2017 அன்று பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக என்றால் சரிதான். வா சா ஆ 11 ஆவணம் மூலம் காப்பீட்டிற்கு சந்தா தொகை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான்.

வா சா ஆ 12 ஆவணத்தில் 18.05.2021ல் எனது கணவர் புறநோயாளியாக சிகிச்சை எடுத்துகொண்டதற்கான புறநோயாளி அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். 01.05.2015 முதல் செப்டம்பர் மாதம் 2017 ஆண்டு வரை தாவா சொத்தில் வசித்து வந்தற்கு மேற்குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களிலும் தாக்கல் செய்துள்ளீர் என்றால் ஆமாம். வா சா ஆ 2 ஆவணமானது குத்தகை தொடர்பாக சங்கதிகள் குறிப்பிடாதால் வா சா ஆ 2 ஆவணம் சட்டபடி செல்லதக்க குத்தகை ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. வா சா 2 ஆவணத்தில் மேற்படி குத்தகை தொகை வங்கி மூலம் அனுப்பப்பட்டதா அல்லது ரொக்கமாக கொடுக்கபட்டதா என்றால் குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு எனது வழக்கறிஞர் மூலம் மறு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 30.03.2017 தேதியிட்ட மறு அறிவிப்பு 1ம் பிரதிவாதி அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். (30.03.2017 தேதியிட்ட மறுஅறிவிப்பு அசல் **பி வா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனக்கும் 1ம் பிரதிவாதி தாயாருக்கும் பணப்பரிவர்தணை இருந்து வந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியுடன் பணப்பரிவர்தணை செய்து வந்தேன். 1ம் பிரதிவாதி தாயார் ராஜாதி 20.02.2017 அன்று என்மீதும் மற்றும் எனது மகன் மற்றும் பலர் ஆகியோர் மீது சங்கர் காவல் நிலையத்தில் கந்துவட்டி கேட்டு மிரட்டுவதாகவும் காசோலைகளை அத்துமீறி வீட்டில் இருந்து எடுத்து சென்றதாக புகார் கொடுத்தார்

என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார்மனு மேற்படி ராஜாதி கொடுத்த புகார் மனு என்றால் சரிதான் (**20.02.2017 தேதியிட்ட புகார் மனு பி வா சா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அந்த புகார் மனுவில் விசாரணை நடைப்பெற்று அது பொய்யாக கொடுக்கப்பட்டதாக முடிக்கப்பட்டுவிட்டது. 1ம் பிரதிவாதி மீது தாம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலை மோசடி புகார் 1ம் பிரதிவாதி மீது நான் தாக்கல் செய்த புகார்மனு என்றால் சரிதான். ( **தாம்பரம் நீதித்துறை நடுவர் ஆ வ எண் 3034/2017 என்ற வழக்கின் புகார்மனு பி வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 01.05.2015 முதல் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். வேறு எந்த விலாசத்திலும் குடியிருந்து வந்தீர்களா என்றால் எனது சொந்த வீட்டிற்கு சென்று வருவேன். பி வா சா ஆ 3 ஆவணத்தில் குறிப்பிட்பட்ட எனது விலாசமானது எனது சொந்த வீட்டின் விலாசம் என்றால் சரிதான்.

எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே எவ்விதமான குத்தகை உறவுமுறைகள் கிடையாது என்றால் சரியல்ல. 20.02.2017 அன்று 1ம் பிரதிவாதி புகார் கொடுத்த பின்னிட்டு நான் அக்டோபர் மாதம் 2017 ஆண்டு அத்துமீறி தாவா சொத்தில் நுழைந்து 2ம் தளத்தில் அமைந்துள்ள பிரதிவாதிகளுக்கு சொந்தான வீட்டில் சட்டவிரோதமாக குடியேறிவிட்டேன் என்றால் இல்லை. 11.10.2017 அன்று தாவா சொத்தை சுபஷி மற்றும் பழனிசாமி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2017 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தாவா சொத்தில் மேற்படி சுபஷி மற்றும் பழனிசாமி கிரையம் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்துவந்தபோது நான் அத்துமீறி தாவா சொத்தில் குடியேறிவிட்டேன் என்றால் சரியல்ல.

எனது மருமகன் 1ம் பிரதிவாதி மீது செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் கடனுற்தி சீட்டு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்க தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான் அதனை எதிர்த்து மேல்மூயையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தாயார் ஏற்கனவே அவர் பெற்ற கடன்தொகை ரூ.2 லட்சத்தை என்னிடம் திருப்பி செலுத்திவிட்டார் எனவும் ஆனால் நான் மேற்படி கந்துவட்டி கேட்டு தொல்லை படுத்தி வீட்டில் இருந்த காசோலையை எடுத்து அதனை மோசடியாக பூர்த்தி செய்து 1ம்

பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக தாம்பரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டு 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை போலியாக கடனுற்தி சீட்டில் கையொப்பம் இட்டு அதனை மருமகனிடம் கொடுத்து பொய்பாக 1ம் பிரதிவாதி மீது செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டு 1ம் பிரதிவாதியின் கையொப்பத்தை வா சா ஆ 2 ஆவணத்தில் போலியாக கையொப்பம் இட்டு மோசடியாக குத்தகை ஒப்பந்த ஆவணம் குத்தகை செய்து தவறாக இவ்வழக்ககை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இவ்வழக்கை முதலில் ஆலந்துார் நீதிமன்றத்தில் 20.11.2017 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணமும் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மீது குத்தகை தொகை ரூ.3 லட்சத்தை திருப்பி கொடுக்ககோறி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முழுமையான குத்தகை ஆவணம் ஏற்படுத்தும் பட்சத்தில் நிரைய தாள்களில் கையொப்பம் பெறவேண்டிஇருக்கும் என்பதால் மோசடியாக ஒரே ஒரு முத்திரை தாள் கொண்டு 1ம் பிரதிவாதி கையொப்பதை போலியாக வா சா ஆ 2 ஆவணத்தில் கையொப்பம் செய்யப்பட்டு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால சரியல்ல. 10.11.2017 அன்று பிரதிவாதிகள் என்னை மிரட்டியதாக வழக்கரையில் குறிப்பிட்ட நிலையில் எந்த நேரத்தில் மிரட்டியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 10.11.2017 அன்று பிரதிவாதிகள் மிரட்டியதாக பொய்யாக குறிப்பிட்டு உள்ளேன் என்றாலும் மேற்படி எந்த வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோறியுள்ள பரிகாறம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது**

**மறுவிசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil

in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.